ORIGINAL ARTICLE

# கே. பாலமுருகன் ‘சுருட்டு’ சிறுகதையில் குடும்ப உறவுகள்
# [KĒ. PĀLAMURUKAṈ ‘CURUṬṬU’ CIṞUKATAIYIL KUṬUMPA UṞAVUKAḶ]

# FAMILY RELATIONSHIP IN THE SHORT STORY BY K.BALAMURUGAN

**உமாதேவி வீராசாமி / Umadevi Veerasamy *[1]**

[1] SMK Ketari, Kampung Ketari, 28700 Bentong, Pahang, Malaysia.
Email: umaragu143@gmail.com

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/146

**Abstract**

This study, based on K. Balamurugan’s "'Suruttu' Short stories: Family Relationships” aims to explore the status of family relationships in short stories. There are various interesting short stories published in recent times. The relationships between family members is essential in the progress of a family and society. Positive family relationships can create prosperous families. Prosperous families can create a good society. Malaysian short story writer K. Balamurugan's short story 'Suruttu' is used as the primary source for this study. K. Balamurugan, who is a Tamil school teacher is a celebrated short stories writer who has written fascinating short stories. He is particularly interested in creating stories for children. This research studies and analyses the importance of family relationships through K. Balamurugan’s 'Suruttu' short stories.

**Keywords:** short story, family relationship

**ஆய்வுச் சாரம்**

‘கே. பாலமுருகன் ‘சுருட்டு’ சிறுகதையில் குடும்ப உறவுகள்’ எனும் தலைப்பிலான இந்த ஆய்வானது சிறுகதையில் காணக்கூடிய குடும்ப உறவுகளின் நிலையை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது. குடும்ப உறவுகள் அடிப்படையிலான சிறுகதைகள் களம் கண்ட வண்ணமாகவே உள்ளன. ஒரு குடும்பத்தின் வளர்ச்சியிலும் சமுதாயத்தின் வளர்ச்சியிலும் குடும்ப உறவுகளின் பங்கு அளப்பரியது. சீரான உறவுகள் கொண்ட குடும்ப உறுப்பினர்கள் சுபிட்சமான குடும்பங்களை உருவாக்க முடியும். சுபிட்சமான குடும்பங்கள் செழுமையான சமுதாயத்தை உருவாக்க முடியும். மலேசியச் சிறுகதை எழுத்தாளர் கே. பாலமுருகனின் ‘சுருட்டு’, எனும் சிறுகதை இந்த ஆய்வின் முதன்மை ஆதாரமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்ப்பள்ளி

ஆசிரியரான கே. பாலமுருகன், தரமிகு படைப்புகளைப் படைத்துச் சிறுகதை உலகில் வெற்றிநடை போட்டு வருகிறார். குறிப்பாகச் சிறுவர்களுக்கான கதைகளைப் படைப்பதில் அவர் ஆர்வம் காட்டி வருகிறார். இவ்வாய்வின் மூலம் 'சுருட்டு' சிறுகதையில் குடும்ப உறவுகளில் நிலை பகுத்தாயப்பட்டுத் தொகுக்கப்பட்டுள்ளன. குடும்ப உறவுகள் சார்ந்த ஆய்வுகள் ஆய்வாளரின் ஆய்வுக்குப் பெருந்துணையாக இருந்தன.

**கருச்சொற்கள்:** சிறுகதை, குடும்ப உறவு

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 2nd April 2021, revised 15th April 2021, accepted 30th April 2021

## முன்னுரை

மனிதர்களின் கதை கேட்கும் ஆர்வம் தொல்பழங்காலம் தொட்டே வேறுன்றியுள்ளது. வாய்மொழியாகப் பரப்பப்பட்ட கதைகள் பின்னர் கூத்து வடிவிலும் நாடக வடிவிலும் நடித்துக் காட்டப்பட்டன. தொழில்நுட்ப வளர்ச்சியினாலும் அச்சு ஊடகங்களின் வருகையினாலும் இன்று கதை இலக்கியம், நாவல் சிறுகதை இலக்கியம் என உருப்பெற்றுள்ளது (பிரேமா,ஆண்டு இல்லை)[1]. தமிழ் இலக்கியம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலான தொடர்ச்சி கண்ட உலகின் சிறந்த இலக்கியமாகும். இன்று தமிழ்மொழியில் பல புது இலக்கிய வகைகள் உருவாக்கப்பட்டுத் தமிழ் இலக்கியம் விரிந்து செல்ல உறுதுணையாக நிற்கின்றன (முனீஸ்வரன், 2017)[2]. இன்றைய சூழலில் சிறுகதைகள் நாளுக்கு நாள் கணந்தோறும் உருவத்தாலும் சொல்லப் பயன்படும் உத்திமுறையாலும் புதிய புதிய வடிவத்தில் புதிய வேகத்தில் பிறக்கின்றன என வெ. பதுமனார் கூறியிருப்பதாகக் க. சுமதி குறிப்பிட்டுள்ளார் (சுமதி, 2014)[3]. சிறுகதை வாழ்க்கையின் ஒரு பகுதியை, கவலையை மறந்துவிட்டுக் கவனிப்பதாக உள்ளது. சிறுகதையின் வடிவம் கதை எழுதுபவரின் மனோதர்மத்தைப் பொறுத்ததாக உள்ளது என்று புதுமைப்பித்தன் சிறுகதையின் போக்கை விளக்கியுள்ளார் (ஜெயந்திமாலா, 2017)[4]. எனவேதான், சமூகம் சார்ந்த கருப்பொருள்களில் அமைந்த சிறுகதைகள் பல்கிப் பெருகிக் கிடக்கின்றன. தன் வாழ்வையும், தம்மைச் சுற்றியுள்ளோரின் வாழ்வையும் பிரதிபலிக்கும் வகையில் அமைகின்ற சிறுகதைகள் விரைவில் சாதாரண மனிதனையும் சென்றடைந்து விடுகின்றன. குறிப்பாக குடும்ப உறவுகளை மையப்படுத்திய சிறுகதைகள் வாசகனை வெகுவாகவே பாதிக்கின்றன. குடும்ப உறவுகளின் நிலை, அவை பாதுகாக்கப்படும் சூழல்கள் இவ்வாறான கதைகளில் காண முடிகின்றது. அவ்வகையில் 'சுடுட்டு' சிறுகதையில் காணக்கூடிய குடும்ப உறவுகளின் நிலையை இக்கட்டுரை விளக்குகிறது.

## ஆய்வு முன்னோடிகள்

ஜெயந்திமாலா 'மு. அன்புச்செல்வன் சிறுகதைகளில் காணப்பெறும் சமுதாயச் சீர்கேடுகள்' என்ற ஆய்வினை மேற்கொண்டுள்ளார். இந்த ஆய்வில் சிறுகதையில் வெளிப்படும் சமுதாயச் சீர்கேடுகள் குறித்துப் பகுத்தாயப்பட்டுள்ளன. இதில் ஆய்வாளர் மணமுறிவு, சூதாட்ட

நம்பிக்கை, பிறன்மனை நோக்கல், தற்கொலை, இளையோர் சீரழிவு, ஆடம்பரப்போக்கு எனப் பல சீர்கேடுகள் குறித்துப் பேசியுள்ளார்.

சுமதி ‘அண்மைக்காலத் தமிழ்ச் சிறுகதைகளில் மகளிர் சிக்கல்கள்’ என்ற ஆய்வினை மேற்கொண்டுள்ளார். முனைவர் பட்ட ஆய்வாக இது அமைந்துள்ளது. ஆய்வாளர் தமிழ்ச்சிறுகதைகளில் காணப்படும் மகளிர் எதிர்நோக்கும் சிக்கல் குறித்துப் பகுத்தாய்ந்துள்ளார். வறுமை, சாதிய ஆதிக்க உணர்வு, காதல் மறுப்பு, தாய்மார்களின் மனவுளைச்சல், பெண் சிசுக்கொலை, உறவு நிலைகளில் ஏற்படும் சிக்கல், குழந்தை பேறின்மை போன்ற சிக்கல்கள் இவ்வாய்வில் கண்டறியப்படுள்ளன.

லாவண்யா பாவண்ணன் சிறுகதைகளில் மனித உறவுகள் என்ற ஆய்வினை மேற்கொண்டுள்ளார் (லாவண்யா, 2009)[5]. முனைவர் பட்ட ஆய்வாக இது அமைந்துள்ளது. ஆய்வாளர், பாவண்ணன் சிறுகதைகளை முதன்மை ஆதாரமாகக் கொண்டு இவ்வாய்வினை மேற்கொண்டுள்ளார். கணவன்-மனைவி, தாய்-மகள், தாய்-மகன், தந்தை-மகன், தந்தை-மகள், அண்ணணன்-தம்பி, தாத்தா-பேரன் போன்ற உறவுகளிடையே நிகழும் போராட்டங்கள், சிக்கல்கள் இந்த ஆய்வில் இடம் பெற்றுள்ளன. இத்தகைய உறவுகளிடையே காணப்படும் நல்லுறவுகள் குறித்தும் ஆய்வாளர் ஆராய்ந்துள்ளார்.

## ஆய்வு முறை

இந்த ஆய்வானது பண்புசார் ஆய்வாகவே அமைந்துள்ளது. மேலும், ஆய்வாளர் நூலாய்வு அணுகுமுறையைக் கையாண்டுள்ளார். ஆய்வின் நோக்கத்தை அடைய கே. பாலமுருகனின் ‘சுருட்டு’ எனும் சிறுகதை ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. சிறுகதை, ஆய்வாளரின் சுய தேர்வாகவே இருந்தது.

## குடும்ப உறவுகள்

குடும்பம் என்னும் சொல் பெற்றோரும் பிள்ளைகளும் சேர்ந்த கூட்டம் என்ற பொருள் தருகிறது. சமூகப் பண்பாட்டைக் கட்டிக் காக்கும் நிறுவனமாகவும் அன்பு, ஒழுங்கு, அரவணைப்பு, கண்டிப்பு, பாலியல், இனப்பெருக்கம் போன்றவற்றின் இருப்பிடமாகவும், இரத்த உறவுடையோர், மணவுறவுடையோர், மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்டோர் என அனைவரும் தங்குமிடமாகவும் திகழ்வது குடும்பமாகும். சமுதாயத்தில் ஒவ்வொருவரும் ஒன்றைச் சார்த்துதான் வாழ வேண்டியுள்ளது. ஒரு மனிதன் பிற மனிதனுடன் ஏற்படுத்திக்கொள்ளும் தொடர்பை உறவு எனும் சொல்லால் அழைப்பர். உறவுக்கு உணர்வு அவசியம். உணர்வுகளின் ஆழம்தான் உறவின் வலிமை என எம். எஸ் உதயமூர்த்தி கூறியுள்ளதாக ஹேனாலில்லி குறிப்பிடுகின்றார் (ஹேனாலில்லி, 2005)[6]. உலகப்படைப்பில் உள்ள உயிரினங்களில் மனித இனத்தில்தான் உறவுமுறைகள் போற்றப்படுகின்றன. மனிதன் ஒரு சமுதாய விலங்கு என வர்ணிக்கப்பட்டாலும், மற்ற விலங்குகளுக்கு இல்லாத புதுமையான உறவுமுறையைக் கொண்டு வாழ்கிறான். அவன் தன்னுடைய அன்பை வெளிப்படுத்துவதும் வெளிப்படுத்தாமல் இருப்பதும் இந்த உறவுமுறைகளின் அடிப்படையில்தான். இத்தகைய உறவுமுறைகள் மலேசியவாழ் மக்களின் வாழ்வியலிலும் காணப்படுவது கண்கூடு. இவை நாவல், சிறுகதை போன்ற இலக்கியப்படைப்புகளில் வெளிப்படுவதையும் காண முடிகின்றது.

**கதைச்சுருக்கம்: சுருட்டு**

அடுக்குமாடி வீடொன்றில் குடியிருக்கும் குடும்பம் ஒன்றின் வாழ்க்கைச் சூழலை மையமாகக் கொண்டு உருவானதே 'சுருட்டு' சிறுகதை. கதைச்சொல்லியின் பெரியப்பா வீரமாணிக்கம். தன் தம்பியின் இறப்பிற்குப் பிறகு தம்பி மனைவியின் வேண்டுகோளுக்கு இணங்க தன் மனைவியோடு கதைச்சொல்லியின் குடும்பத்தில் அடைக்கலமாகிறார். அவருக்குக் குழந்தைகள் கிடையாது. அவ்வப்பொழுது வீட்டிற்கு வந்து செல்கிறார் அம்மாவின் தம்பி பாண்டியன் மாமா. வீரமாணிக்கத்தின் முன் அதிகம் பேசாதவர். கதைச்சொல்லின் அம்மா பொறுமைக்குப் பேர் போனவர். தன் கணவனின் இறப்பிற்குப் பின் அவர் அண்ணன் வீரமாணிக்கத்தை ஒதுக்கி வைக்காமல் தன் குடும்பத்தோடு சேர்ந்து வாழ வழிவகுக்கிறார். தன் முரட்டுத்தனத்தாலும் பிடிவாதத்தாலும் வீட்டை ஆட்டிப்படைக்கும் வீரமாணிக்கத்தைச் சுற்றி கதை நகர்கிறது. எப்பொழுதும் சுருட்டும் கையுமாக உலா வருகிறார் வீரமாணிக்கம். அன்புணர்ச்சி அற்ற வீரமாணிக்கம் குடும்ப உறவுகளை மதிக்காது செயல்படுகிறார். அவருக்குக் கோபம் வந்து விட்டால் ஏதாவது பொருள் உடையும். அவருடைய குரல் அந்த அடுக்குமாடி குடியிருப்புப் பகுதிக்கே கேட்கும். பிற இன அண்டை அயலாரின் கோபத்தைக் கூட பொருட்படுத்தாதவர். எதற்கெடுத்தாலும் தன் மனைவியை அடிப்பதும் திட்டுவதுமாகக் காலம் கழிக்கிறார். வீட்டின் வெளிப்புறம் வரை மனைவியைத் துரத்தி துரத்தி அடிப்பவர். தன் தம்பி பிள்ளைகளிடத்திலும் பாசத்தை வெளிப்படுத்தாமல் முரட்டுத்தனமாக நடந்துகொள்கிறார். தம்பி மனைவியிடத்திலும் கருணையுள்ளத்தோடு நடந்துகொள்வதாகவும் இல்லை. ஒரு கட்டத்தில் தன் சுருட்டை எடுத்த தன் தம்பியின் மூத்த மகன் மீது கோபம் கொள்கிறார். அவனது இரண்டு கால்களையும் கட்டி ஐந்தாவது மாடியிலிருந்து கீழே இறக்கி பயம் காட்டுகிறார். பின்னர் அவனைத் தூக்கி வராந்தாவில் போடுகிறார். அந்நேரம் அங்கு வந்த அவன் அம்மா, தன் மூத்த மகன் வீரமாணிக்கத்தால் துன்புறுத்தப்பட்டதைக் கண்டு பொங்கி எழுந்து வீரமாணிக்கத்தைத் திட்டித் தீர்க்கிறார். இதனைச் சற்றும் எதிர்பார்க்காத வீரமணிக்கம் அச்சம்பவத்தினால் அதிர்ச்சிக்குள்ளாகிறார். வெளியே செல்கிறார். இரவு வரை வீடு திரும்பாமல் இருக்கிறார். அவர் மனைவி அழுகையுடன் வீட்டில் செய்வதறியாது தவிக்கிறார். இறுதியில் கதைச்சொல்லியின் அம்மா, வீரமாணிக்கத்தின் மனைவியிடம் பணத்தைக் கொடுத்து, வீட்டிற்குச் சாமான்களை வாங்கிக்கொண்டு அப்படியே வீரமாணிக்கத்திற்குச் சுருட்டும் வாங்கி வரச்சொல்கிறார். அதோடு வீரமாணிக்கத்தைக் கண்டால் கையோடு அழைத்து வரும்படியும் கூறுகின்றார். வீரமாணிக்கத்தின் மனைவியும் உடனே புறப்படுகிறார்.

**குடும்ப உறவுகளின் நிலை**

இச்சிறுகதையைக் கதைமாந்தர்களின் அடிப்படையில் ஆய்வு செய்யுப்பொழுது குடும்ப உறவுகளின் நிலை தெள்ளத்தெளிவாகப் புலப்படுகிறது. 'சுருட்டு' சிறுகதையில் ஒவ்வொரு கதைமாந்தரும் குடும்ப உறவுகளை வலுப்படுத்த முயல்வதைக் காண முடிகிறது. எதிர்மறை கதைமாந்தரும்கூட குடும்ப உறவுகளைத் தற்காக்க அவர் அறியாமலே செயல்படுவது சிறப்பு.

**அ. வீரமாணிக்கம் (பெரியப்பா)**

'சுருட்டு' சிறுகதையில், கம்போங் ராஜாவில் வாடகை வீட்டில் வசிக்கும் வீரமாணிக்கம் கடன் தொல்லையால் அவதிப்பட்டாலும் தன் பிடிவாதத்தையோ முரட்டுத்தனத்தையோ எந்தவொரு

சூழலிலும் விட்டுக்கொடுப்பவராக இல்லை. தம்பியின் இறப்பிற்குப் பின்னர் தம்பி மனைவியின் வேண்டுகோளுக்கிணங்க தம்பியின் வீட்டிலேயே தன் மனைவியோடு தங்குகிறார். அவ்வீட்டில் அவர் போக்கிற்கே வாழ்கிறார் வீரமாணிக்கம். தன் மனைவியின் மீது காட்டும் ஆதிக்கமாகட்டும், தம்பி குழந்தைகளிடத்தில் காட்டும் அதிகாரமாகட்டும் அனைத்திலும் மிகச் சுதந்திரமாகவே செயல்படுகிறார். அவர் அவ்வீட்டில் எடுத்துக்கொள்ளும் உரிமையை இங்கே காண முடிகிறது. தன் தம்பி வீட்டைத் தன் வீடு போல் பாவித்து அங்குத் தன் விருப்பத்திற்கேற்பச் சுதந்திரமாகச் செயல்படுகிறார். இன்றைய நடைமுறையில் வாழ்வில் இந்நிலையைக் காண்பது அரிது. தங்களுக்குச் சொந்தமில்லாத வீட்டில் வசிப்பவர்கள், முடிந்தவரை தங்கள் நடவடிக்கைகளில் அதிகம் கவனமாக இருப்பர். தங்களால் சம்பந்தப்பட்ட குடும்பத்திற்குத் தொல்லை வராமல் இருப்பதில் தீவிரம் காட்டுவர். அக்குடும்பத்தோடு பட்டும் படாமல் இருப்பர். ஆனால், வீரமாணிக்கம் மூன்று ஆண்டுகளாகப் தன் தம்பி வீட்டையும் தம்பியின் உறவுகளையும் பிரித்துப் பார்க்காமல் உரிமை காட்டுகிறார். அன்பு வெளிப்படாவிட்டாலும் அவர் மனதிற்குள் குடிகொண்டிருக்கும் 'அதுவும் தன் குடும்பம்தான்' என்ற அவரது ஆழமான உணர்வு ஆங்காங்கே வெளிப்படுகிறது.

மேலும், அவரது இருப்பு அக்குடும்பத்திற்குப் பாதுகாப்பாகவே கருதப்படுகிறது. அவர் நினைத்திருந்தால் தன் தம்பியின் இறப்பிற்குப் பிறகு அக்குடும்பத்தை பற்றி அக்கறை கொள்ளாது, தான் உண்டு தன் வேலை உண்டு எனக் கம்போங் ராஜாவிலேயே இருந்திருக்கலாம். ஆனால், அவ்வாறு செய்யாது, தன் தம்பி மனைவி அழைத்தவுடனேயே மறுப்புச் சொல்லாது அவ்வழைப்பினை ஏற்றுக்கொள்கிறார். எவ்வளவு கோபபட்டாலும் கூட வீட்டை விட்டுச் செல்ல அவர் முற்படவில்லை. சிறுகதையின் இறுதியில், கோபத்தாலும் அதிர்ச்சியின் காரணத்தாலும் வீட்டை விட்டு வெளியே சென்றவர் இரவு வெகுநேரமாகியும் வீடு திரும்பவில்லை எனக் காட்டப்பட்டாலும், அவர் மனைவி அவரைத் தேடிச்செல்வதாக கதை நிறைவு பெறுகிறது. அங்கே அவர் மீண்டும் வீடு திரும்பி விடுவார் என்ற நம்பிக்கை பிறக்கவே செய்கிறது. ஆக, குடும்பத்துடனான அவரது உறவு எக்காரணத்தாலும் விரிசல் காணப்போவதில்லை என்பது திண்ணம்.

**ஆ. வீரமாணிக்கத்தின் மனைவி**

ஏறக்குறைய 50 விழுக்காட்டுத் திருமணமான பெண்கள் தங்கள் கணவர்களால் துன்புறுத்தப்படுகின்றனர் எனக் கலிபோர்னியா சட்டத்துறை அலுவலகம் கூறுவதாக ஆய்வாளர் ஆ. இராஜேஸ்வரி தம் ஆய்வில் குறிப்பிட்டுள்ளார் (இராஜேஸ்வரி, 2018)[7] அவர்களுள் ஒருவள்தான் வீரமாணிக்கத்தின் மனைவி. தன் கணவன் தன்னைப் பேச்சாலும் செயலாலும் பல்வகை துன்பங்களுக்கு ஆளாக்கினாலும், அவன்பால் கொண்டிருக்கும் அன்பானது மாற்றம் காணவில்லை. அவன் தன் மேல் கோபங்கொண்டு காயப்படுத்தினாலும், எதிர்த்து நிற்காமல் அமைதி காக்கிறாள். அவன் நலத்தின் மேல் அக்கறை கொள்கிறாள்.
*'எப்பொழுதும் அவர் கோபமாக இருக்கும்போது பெரியம்மா உணவைப் போட்டு பெரியப்பாவை சாப்பிட அழைக்கும் போராட்டம் கொடுமையானது,'* என்ற வரி இதற்குச் சான்று பகர்கின்றது.

தன்னைக் கொடுமை செய்யும் கணவனை விட்டு விலக அவள் எச்சூழலிலும் நினைக்கவில்லை. விவாகரத்திற்கு விண்ணப்பிக்கவில்லை. இங்கே கணவன் மனைவி உறவில் அவள் வைத்துள்ள மதிப்பு வெளிப்படுகிறது. பெண் அன்பு காட்டுபவள்; ஊக்கமளிப்பவள்; இல்லறத்தை நல்லறமாக்குபவள்; விருந்தோம்பலில் பெண் பண்பையும் பாசத்தையும்

ஒருங்கிணைத்துத் தருபவள். இல்லறத்தை நல்லறமாக்கும் பெண்களால் வீடு நல்வழி பெறும். இக்கூற்று மாணிக்கத்தின் மனைவியின் செயல்பாடுகளின்வழி மெய்ப்பிக்கப்படுவதைக் காண முடிகிறது.

கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருசன் என்ற தாரக மந்திரத்தைத் தலை மேல் கொண்டு வாழும் அவள் தன் கணவனின் துன்பத்தைத் தனது துன்பமாக எண்ணி வருந்துகிறாள். மேலும், தம்பி மனைவியின் கோபத்திற்கு ஆளான தன் கணவன் இரவாகியும் வீடு திரும்பாததை எண்ணி வருந்துகிறாள். இங்கு ஒரு மனைவியின் பாசப்பிணைப்பு வெளிப்படுகிறது.

*'பெரியம்மா துண்டைத் தோளில் போட்டுக் கொண்டு அழுகையும் முகமுமாக அம்மா ஏதும் சொல்லும்வரை அப்படியே அமர்ந்ந்திருந்தார். "ஏய் பிள்ள! இந்தா இதுல பத்து வெள்ளி இருக்கு. போய் நான் சொல்ற ஜாமன வங்கிட்டு அப்படியெ அந்த மனுசனுக்குச் சுருட்டு வாங்கியா... இருந்தா கூட அழைச்சிட்டு வா. மணி என்ன ஆவுது,". பெரியம்மா உடனே எழுந்து புறப்பட்டார்.'* என்ற சிறுகதையின் முடிவு வீரமாணிக்கத்தின் மனைவியின் அன்பின் ஆழத்தை அழகுபட எடுத்தியம்புகிறது. வலுவான கணவன் மனைவி உறவும் வெளிப்படுகிறது.

### இ. கதைச்சொல்லியின் அம்மா

கதைச்சொல்லியின் அம்மா, இச்சிறுகதையில் துணைக்கதைமாந்தர்களுள் ஒருவராக வலம் வருகிறார். தன் குடும்பத்தின் மீதும் தன் கணவனின் குடும்பத்தின் மீதும் அன்பும் அக்கறையும் கொண்டு செயல்படுகிறார். வேலைக்குச் செல்லாமல் கடன் தொல்லையால் அவதியுறும் தன் கணவனின் அண்ணன் வீரமாணிக்கத்தின் குடும்பத்திற்கு எவ்வித எதிர்பார்ப்புமின்றி உதவ முன்வருகிறார். 'சுருட்டு' சிறுகதையில், கணவன்வழி குடும்ப உறவுகளும் முக்கியம் வாய்ந்தவை என்ற சிந்தனை வெளிப்பாடு நன்று.

வீரமாணிக்கதை வீட்டின் பெரியவராகப் பாவித்து அவர் செய்யும் தவறுகளைப் பொருட்படுத்தாது பொறுமையாக நடந்துகொள்கிறார் கதைச்சொல்லியின் அம்மா. தன் தயவால்தான் வீரமாணிக்கம் குடும்பம் வாழ்கிறது என்பதை உணர்ந்தும் அவர்களைக் கடிந்துகொள்ளாமல் அரவணைத்து வாழ்கிறார். வீரமாணிக்கத்தின் கோபம் நியாயமற்றதாக இருப்பினும், எதிர்வாதம் செய்யாமல் அவர் போக்கிலேயே விடுகிறார்.

*'பெரியம்மா சாப்பிடச் சொல்லிக் கேட்கும்போதெல்லாம் பெரியபா தட்டை ஓங்கிச் சுவரில் அடித்து விடுவார். சாம்பாரும் சோறும் ஒரு வகையான வீச்சத்துடன் குலைந்து ஒழுகும். உடனே அம்மா வழக்கம்போல் உள்ளே ஓடி துடைப்பத்தைக் கொண்டு வந்து துடைக்க ஆரம்பித்து விடுவார்,'* என்ற வரிகள் அம்மாவின் பொறுமைக்குச் சான்று பகர்கின்றதன. குறிப்பாக, '*வழக்கம்போல் உள்ளே ஓடி துடைப்பத்தைக் கொண்டு வந்து துடைக்க ஆரம்பித்து விடுவார்'* என்ற வரி இத்தகைய சம்பவம் அடிக்கடி நடப்பதைக் காட்டுகின்றது. இருப்பினும், பொறுமையிழக்காது செயல்படும் கதைச்சொல்லியின் அம்மா, பக்குவம் நிறைந்தவராக வலம் வருகிறார். ஒற்றுமையில்லாக் குடும்பம் ஒரு மிக்கக் கெடும் என்ற உண்மை உணர்ந்து குடும்ப உறவுகள் பிளவுபடாமல் பாதுகாக்கப்படுவதை இச்சிறுகதையில் காண முடிகிறது.

கதைச்சொல்லியின் அம்மா வீரமாணிக்கத்தின் மனைவிபால் காட்டும் பரிவும் உறவுகளின் நிலையை வலுப்படுத்துகிறது. கணவனின் அடி உதைக்கு ஆளாகித் துன்பப்படும் மாணிக்கத்தின் மனைவியைத் தன் உடன்பிறப்பாய்க் கருதி ஆறுதலாய் இருப்பதைக் காண முடிகிறது. *'சண்டையெல்லாம் முடிந்து பெரியம்மா அழுகையுடனோ அல்லது உடலில் காயங்களுடனோ வீட்டில் வந்து அடங்குவார். சிறிது நேர அமைதிக்குப் பிறகு அம்மா பெரியம்மாவின் முதுகில் தடவிக் கொடுத்து விடுவார்,'* என்ற வரிகளில் குடும்ப உறவுகள் மீதான பரிவு இயல்பாய் வெளிப்படுகிறது.

**உ. பாண்டியன்**

கதைச்சொல்லியின் தாய்மாமன் பாண்டியன். தன் அக்காளின்பால் அன்பு கொண்டு மாதத்தில் இருமுறை அவரைத் தேடி வீட்டிற்கு வந்து விடுபவர். அக்காளின் வீட்டுச் செலவைப் பார்த்துக் கொண்டு உற்ற துணையாய் இருப்பவர். அவரை நம்பியே கதைச்சொல்லியின் குடும்பம் இருக்கிறது. 'சுருட்டு' சிறுகதையில் உடன்பிறப்புகள் இடையே எவ்வித எதிர்பார்ப்புமின்றி மலர்ந்திருக்கும் அன்பு போற்றுதற்குரியது. தாயும் பிள்ளையானாலும் வாயும் வயிறும் வேறு என இன்றைய சூழலில் மக்கள் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர். தனக்கு மிஞ்சித்தான் தானம் தர்மம் என்ற சிந்தனையில் வாழ்வோரும் உண்டு. பாண்டியன் போன்றவர்களின் பொதுநலம், உறவின்பால் கொண்ட பற்றுதலின் அடிப்படையிலேயே அமைந்துள்ளது.

தன் அக்காளின் குடும்பத்தைத் தாங்கிப் பிடிக்கும் பாண்டியன், அக்காள் வீட்டில் வாழும் மற்ற உறவுகளையும் மதித்து வாழ்பவனாக வலம் வருகிறான். வீரமாணிக்கத்தின் மீது கொஞ்சம் கோபம் இருந்தாலும், பாண்டியன் எச்சூழலிலும் அவர் மீது வெறுப்பை வெளிப்படுத்தியதில்லை. வீரமாணிக்கமும் பாண்டியனும் பேசிக்கொண்டதில்லை. பாண்டியன் வீட்டிற்கு வரும் நாட்களில் வீராமாணிக்கம் வரவேற்பறையில் விறைத்தவாறு அமர்ந்திருந்தாலும் பாண்டியன் எதுவும் நடக்காததுபோல் போய்விடுவது குடும்ப உறவின் மேல் அவன் கொண்ட மதிப்பையே காட்டுகிறது.

**முடிவுரை**

குடும்ப மகிழ்ச்சி, நிம்மதி கருதி குடும்ப உறுப்பினர்கள் பொறுமையுடனும் விட்டுக்கொடுத்தும் செயல்படுவது இன்றைய சூழலில் மிக அவசியமாகிறது. அவ்வகையில் 'சுடுட்டு' சிறுகதை, குடும்ப உறவுகளை வலுப்படுத்தும் முயற்சிகளை வெளிக்கொணரும் படைப்பாக அமைந்துள்ளது. குடும்ப உறவுகள் பிளவுபடாமல் ஒரு கூரையின்கீழ் வாழ்வதை உறுதிப்படுத்த கதைச்சொல்லியின் குடும்ப உறுப்பினர்கள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் நம்மை வியக்கச் செய்கின்றன. இந்த ஆய்வானது குடும்பம் என்ற நல்லதொரு பல்கலைக்கழகம் உருவாக குடும்ப உறுப்பினர்களிடையிலான உறவு மிக முக்கியம் என்பதை மெய்ப்பிக்கின்றது.

**மேற்கோள் நூல்கள்**:


1. Prema, R.. *Ciṟukatai [Short Story]*. Retrieved from http://www.tamilvu.org/courses/degree/p101/p1011.pdf
2. Munisvaran, K. (2017). *Ilakkiyamum camūka aṟiviyalum [Literature and the social sciences]*. Malaysia: Persatuan Linguistik Bahasa Tamil.
3. Sumathi, K. (2014). *Aṇmaikkālat tamiḻc ciṟukataikaḷil makaḷir cikkalkaḷ [Women's issues in recent Tamil short stories]*. India: Periyar University.
4. Jeyanthimala, R. (2017). *Mu. Aṉpuccelvaṉ ciṟukataikaḷil kāṇappeṟum camutāyac cīrkēṭukaḷ [Social disorders found in the short stories of M. Anbuchelvan]*. *Muallim Journal of Social Sciences and Humanities (MJSSH)* Volume 1- Issue 2 (2017), Pages 21-33. Retrieved from https://www.mjsshonline.com/index.php/journal/article/view/8/7
5. Lavanya, P. (2009). *Pāvaṇṇaṉ ciṟukataikaḷil maṉita uṟavukaḷ [Human Relations in Pavannan Short Stories]*. India: Tamil Research Center. ABC Mahalakshmi Women's College, Manonmaniyam Sundaranagar University.
6. Henalily, J.R. (2005). *Cuntararāmacāmi ciṟukataikaḷil maṉita uṟavukaḷ [Human Relations in Sundararamasamy Short Stories]*. Tirunelveli: Tamil Department, ABC Mahalakshmi College of Women, Manonmaniyam Sundaranagar University.
7. Rajeswary, A. (2018). *'Am'mā' kataiyil kaṇavaṉāl koṭumaippaṭuttappaṭṭa maṉaivi [Wife abused by husband in 'mother' story]*. Journal of Tamil Peraivu 7(1), 91-97. Retrieved from https://tamilperaivu.um.edu.my/index.php/tamilperaivu/article/view/12850/8243